# தரம் 11



# தமிழ்மொழியும் இலக்கியமும்

## அலகு 11

சங்கப் பாடல்கள் : புறநானூறு

Mr S.Kuneswaran
J/Thondaimanaru Veerakaththippillai Maha Vidyalayam, Thondaimanaru.Jaffna.

## அறிமுகம்



**புறநானூறு சங்கப்பாடல் "இனி நினைந்திரக்க...."**

சங்ககாலம் என்பது கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட காலமாகும். இக்காலத்தில் தனிப்பெரும் இலக்கியங்களாக சங்க இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய புறநானூற்றில் இருந்து 243ஆவது பாடல் இங்கு தரப்பட்டுள்ளது.

தொடித்தலை விழுத்தண்டினாரின் “இனி நினைந் திரக்க மாகின்று…” என்ற செய்யுளில் இளமையின் வளமைத் தன்மையும் இளையோரின் செயல்களும் அந்த இளமை கழிந்த பின்னர் வருகின்ற முதுமைப் பருவத்தின் இயல்புகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.



பாடிய புலவர் : தொடித்தலை விழுத்தண்டினார்.

திணை : பொதுவியல்

துறை : கையறுநிலை

புறநானூறு புறத்திணை மரபைக் கூறும் இலக்கியமாகும். இது நான்கு தொடக்கம் நாற்பது அடிகள் வரை பாடப்பட்ட 400 செய்யுள்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும். இவ்விலக்கியத்தில் போர், வீரம், வெற்றி, நட்பு, கொடை, அறவுரை, தோற்றப்பொலிவு, நிலையாமைக் கருத்துக்கள் முதலானவை பாடப்பட் டுள்ளன.



## பாடல்

“இனி நினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர் மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.”



## பாடலின் கருத்து

இப்பாடல் கழிந்துபோன இளமையை நினைந்து இரங்கிப் பாடுவதாக அமைந்தாகும். செறிந்த மணலிடத்துச் செய்யப்பட்ட வண்டற் பாவைக்குப் பூவினைச் சூட்டி குளிர்ந்த பொய்கையில் நீராடி விளையாடும் மகளிரோடு கைகோர்த்து அவர் தழுவிய வழி தழுவியும் அசைந்த இடத்து அசைந்தும் ஒளித்துச் செய்யும் வஞ்சனையற்ற செயலறியா இளையோர் ஒன்றுகூடி உயர்ந்த கிளைகளையுடைய மருதமரத்தில் ஏறி அதிலிருந்து நீர்த்துறையைத் தொடக்கூடிய அளவு தாழ்ந்த கிளையிலிருந்து கரையிடத்தே நிற்போர் வியக்கவும் நீரலைகளில் நீர்த்திவலைகள் தெறிக்கவும் ஆழம் அதிகமுள்ள மடுவில் குதித்து அதில் மூழ்கி அதன் அடியில் இருக்கும் மணலை முகந்துகாட்டிய வஞ்சனையில்லாத இளமை இப்போது நினைக்க இரக்கம் உண்டாகிறது. இப்போது பூண்பூட்டிய தலையை உடைய பாரிய தண்டுக்கோலை ஊன்றி தளர்ந்து இருமலிடையே சில சொற்களையும் பெரிய முதுமையையும் உடையவர்களாகிய எமக்கு அந்த இளமை எங்குள்ளது. இப்போது அதை நினைக்கவும் இரக்கம் உண்டாகிறது என இப்பாடல் கழிந்துபோன இளமையை நினைந்து இரங்குவதாக அமைந்துள்ளது.

பிள்ளைகளே, இப்பாடல் தொடர்பான வினாக்களையும் அவற்றுக்கு நாம் எப்படி விடையளிக்கலாம் என்பதையும் இப்பகுதியில் நோக்குவோம். இதன் முதற்பகுதியில் அலகு தொடர்பான இலகு வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. அவை பல்தேர்வு வினாக்கள், தொடர்புபடுத்துதல், சரி பிழை தெரிவு செய்தல், சுருக்கவிடை எழுதுதல் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளன. மற்றைய பகுதியில் பரீட்சை வினாத்தாள் மாதிரி வினாக்கள் சில சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய விடைகளை எழுதி நீங்கள் சுயமாகக் கற்று இந்த அலகு தொடர்பான பூரண அறிவினைப் பெறுவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

# பல்தேர்வு வினாக்கள்



1) இனி நினைந் திரக்க மாகின்று பாடலின் ஆசிரியர் யார்?

1. தும்பிசேர் கீரன்
2. தொடித்தலை விழுத்தண்டினார்
3. கபிலர்
4. ஔவையார்

## 2) புறநானூற்றின் பாவடிவம் யாது?

1. வஞ்சி
2. விருத்தம்
3. வெண்பா
4. அகவல்

3) “இனி நினைந் திரக்க மாகின்று” என்ற புறநானூற்றுப் பாடலின் திணை யாது?

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. பொதுவியல்

4) "அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ" என்பதில் 'அளிது' என்பதன் கருத்து

1. வண்டு

2. இளமை

3. நினைவு

.

4. இரங்கத்தக்கது

5) "இனி நினைந் திரக்க மாகின்று" என்ற புறநானூற்றுப் பாடலின் துறை யாது?

1. ஆற்றுப்படை

2. பொதுவியல்

3. கையறுநிலை

4. மருதம்

6) வீரம், ஆட்சித்திறன். கொடை, போர், தோற்றப்பொலிவு ஆகியவற்றைக் கூறும் இலக்கியம்

1. குறுந்தொகை

2. புறநானூறு

3. கலித்தொகை

4. அகநானூறு

## 7) இப்பாடலில் வெளிப்படும் பழந்தமிழர் விளையாட்டுகள்

1. நீர் விளையாட்டு
2. வண்டல் மண்ணில் பாவை செய்து விளையாடுதல்
3. நீரில் குதித்து மணலை முகந்து விளையாடுதல்
4. மேற்கூறிய யாவும்

8) கழிந்துபோனதற்காக எதுவும் செய்யமுடியாது வருந்துதல்

1. இறந்தகாலம்

2. இரங்குதல்

3. கையறுநிலை

4. முதுமைப் பருவம்

# 9) புறநானூற்றுப் பாடலில் வெளிப்படும் மூதாளரின் நிலை

1. பூண்பூட்டிய ஊன்றுகோலுடன் நடத்தல்

2. இளமையை நினைத்து இரங்குதல்

3. உடல்தளர்வும் இருமலிடை சில வார்த்தைகள் பேசுதலும்

4. மேற்கூறிய யாவும்

10) தழீஇ, தைஇ ஆகிய சொற்களில் வெளிப்படும் இலக்கணக் குறிப்பு

1. உயிரளபெடை

2. ஒற்றளபெடை

3. பின்னொட்டு

4. பெயர்ச்சொல்

# தொடர்புபடுத்துக



## (ஆ) தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| தண் | குளிர்ச்சி |
| குட்டம் | குளம், மடு |
| முதாளர் | முதியவர் |
| தைஇ | சூடி |
| தொடி | பூண் |

## (ஆ) தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| தண்டு | கூட்டம் |
| சினை | அலை |
| ஆயம் | தழுவி |
| திரை | ஊன்றுகோல் |
| தழீஇ | கிளை |

# சரி பிழை இடுக



**(இ) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( √ ) சரி எனவும் பிழையாயின் ( × ) பிழை எனவும் குறிக்குக.**

1) புறநானூறு என்ற இலக்கியம் சங்ககாலத்திற்குரியது ( √ )

2) புறநானூற்றில் அகத்திணையும் புறத்திணையும் பாடப்பட்டுள்ளன. ( × )

3) நன்மை தீமை தெரியும் இளம்பருவம் கல்லா இளமை ஆகும். ( × )

4) வண்டல் மண்ணாலான பாவைக்கு மகளிர் பூச்சூட்டினர். ( √ )

5) தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி இளையோர் நடந்தனர் ( × )

# குறுவினாவிடை



## (ஈ) குறுவினாவிடை

"இனி நினைந் திரக்க மாகின்று..." என்ற புறநானூற்றுப் பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1) பாடலில் வெளிப்படும் இளைஞர் செயற்பாடு யாது?

ஆழமான நீரினுள் மரக்கிளையில் இருந்து குதித்து மூழ்கி அடியிலிருக்கும் மணலைத் தொடுவது.

## (ஈ) குறுவினாவிடை

"இனி நினைந் திரக்க மாகின்று..." என்ற புறநானூற்றுப் பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1) பாடலில் வெளிப்படும் மகளிர் செயற்பாடு யாது?

நீர் விளையாடுதலும் ஈரவண்டல் மண்ணால் செய்த பாவைக்கு பூச்சூடி விளையாடுதலும்

## (உ) பின்வரும் செய்யுளின் இடைவெளியில் வரவேண்டிய சொற்களை நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| **தழீஇத்** | **மருதம்** | **குட்டத்து** | **மருளத்** |
| **கல்லா** | **திணி** | **கயம்** | **மறை** |
| **கோடு** | **தைஇத்** | | |

“ இனி நினைந் திரக்க மாகின்று …திணி…மணற்

செய்யுறு பாவைக்குக் கொய்பூத் …தைஇத்…

தண் …கயம்… ஆடும் மகளிரொடு கைபிணைந்து

தழுவுவழித் …தழீஇத்…தூங்குவழித் தூங்கி

…மறை…யென லறியா மாயமி லாயமொ

டுயர்சினை …மருதத்… துறையுறத் தாழ்ந்து

நீர்நணிப் படி …கோடு… ஏறிச் சீர் மிகக்

கரையவர் …மருளத்… திரையகம் பிதிர

நெடுநீர்க் …குட்டத்து… துடுமெனப் பாய்ந்து

குளித்துமணற் கொண்ட …கல்லா… விளமை”

# அலகு தொடர்பான மாதிரி வினாக்கள்



## பல்தேர்வு வினாக்கள்

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "கொய்பூத் **தைஇ**" - இங்கு தைஇ என்பது

1. தைத்தல் 2. கோர்த்தல் 3. சூடுதல் 4. பறித்தல்

(1 புள்ளி)

## பல்தேர்வு வினாக்கள்

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

2) "உயர்**சினை** மருதம்" - இங்கு சினை என்பது

1. முட்டை
2. கிளை
3. மரம்
4. ஆழம்

(1 புள்ளி)

## பல்தேர்வு வினாக்கள்

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

3) பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு

1. மரம் - கிளை
2. குளம் - ஆழம்
3. முதுமை – தளர்ச்சி
4. தழுவி - தூங்கி

(1 புள்ளி)

## பல்தேர்வு வினாக்கள்

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

4) பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு

1. தண்டு – கோல்
2. இளையோர் - முதியோர்
3. அலை – திரை
4. பூ - தேன்

(1 புள்ளி)

## பல்தேர்வு வினாக்கள்

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

5) தழீஇ என்பதில் இடம்பெற்றுள்ள இலக்கணக் குறிப்பு

1. உயிரளபெடை
2. ஒற்றளபெடை
3. வினையெச்சம்
4. தழுவி

(1 புள்ளி)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

சுருக்கமான விடை தருக

1) “இனி நினைந்திரக்கமாகின்று”

(அ) பாடலைப் பாடியவர் யார்?

(ஆ) இதன் துறை யாது?

(2 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## சுருக்கமான விடை தருக

2) “மறையென லறியா மாயமிலாய மொடு”

(அ) இவ்வரியினைச் சந்தி பிரித்து எழுதுக.

(ஆ) ஆயம் என்பதன் பொருள் யாது?

(2 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## சுருக்கமான விடை தருக

3) “தொடித்தலை விழுத்தண் டூன்றி” இங்கு தொடி, தண்டு ஆகியவற்றின் பொருளைத் தருக.

(2 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## சுருக்கமான விடை தருக

4) புறநானூறு எத்தனை பாடல்களைக் கொண்டது? இதன் யாப்பு யாது?

(2 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

சுருக்கமான விடை தருக

5) "கரையவர் மருளத் திரையகம் பிதிர" என்பதனால் புலப்படுத்தப்படுவது யாது?

(2 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டமைப்பு வினாக்கள்

"…. குளித்து மணற்கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சில சொற்
பெரு மூதாளரே மாகிய வெமக்கே"

(அ) "தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்றிருமிடை மிடைந்த சில சொற்பெருமூதாளரே" என்பதன் கருத்தை எழுதுக.

(ஆ) 'கல்லா இளமை" என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படுவது யாது?

(4 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டமைப்பு வினாக்கள்

பின்வரும் செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள விளாக்களுக்கு விடை எழுதுக.

“குளித்து மணற்கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சில சொற்
பெரு மூதாளரே மாகிய வெமக்கே”

அ) முதுமையின் இரங்கத்தக்க நிலை இங்கு எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

ஆ) கல்லா விளமை என்பதனூடாக இளமைப் பருவத்தின் எத்தகைய தன்மை புலப்படுத்தப்படுகிறது?

(4 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டமைப்பு வினாக்கள்

"திணிமணற் செய்வுறு பாவைக்குக்
கொய்பூத் தைஇ"

(அ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டு யாது?

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் பாவை எதனால் ஆக்கப்படுகிறது?

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டமைப்பு வினாக்கள்

**தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து....**

**(அ) தண்கயம் என்றால் என்ன?**

**(ஆ) இப்பாடல்வரி இடம்பெற்ற சங்கநூல் யாது?**

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டுரை வினாக்கள்

“இனி நினைந்திரக்க மாகின்று .. என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்

அ) இளமைக் காலத்து உணர்வுகள்

ஆ)முதுமைக் காலத்து உணர்வுகள்

சித்திரிக்கப்படுமாற்றை விவரிக்குக.

(10 புள்ளிகள்)

# சங்க இலக்கியம் - புறநானூறு பாடல் தொடர்பான வினாக்கள்

## கட்டுரை வினாக்கள்

**புறநானூற்றுச் செய்யுளாகிய "இனி நினைந்திரக்க மாகின்று" என்ற சங்கப் பாடலை அடிப்படையாகக் கொண்டு**

**(அ) செய்யுளில் இடம்பெறும் பிரதான கருத்தை எழுதுக.**

**(ஆ) இப்பாடலில் இளையோர், மகளிர் செயல்களாகக் குறிப்படப்படுபவற்றை விபரிக்குக.**

**(10 புள்ளிகள்)**

# நன்றி